**செய்தி வெளியீடு எண்: 363/2019 நாள்: 18.11.2019**

**காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் வளாகத்தில் உள்ள மக்கள் நல்லுறவு மையம் கூட்ட அரங்கில் நடைபெற்ற மக்கள் குறை கேட்பு நாள் கூட்டத்தில் மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழையினால் இடிமின்னல் தாக்கி உயிரிழந்த 6 நபர்களின் குடும்பங்களுக்கு ரூ.24 இலட்சத்திற்கான நிவாரண நிதியுதவியினை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.பா.பொன்னையா, இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்!**

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் வளாகத்தில் உள்ள மக்கள் நல்லுறவு மையம் கூட்ட அரங்கில் வாராந்திர மக்கள் குறை கேட்பு நாள் கூட்டம் இன்று (18.11.2019) மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.பா.பொன்னையா, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பல்வேறு கோரிக்கை மனுக்களை பொதுமக்களிடமிருந்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பெற்றுக்கொண்டார்.

இக்கூட்டத்தில் முதியோர் உதவித்தொகை, கல்வி உதவித்தொகை, ஓய்வூதியத்தொகை. வீட்டுமனைப்பட்டா, பசுமை விடுகள், திருமண உதவித்தொகை, குடும்ப அட்டை, பட்டா மாற்றம், விதவை உதவித்தொகை, மாற்றுத்திறனாளிகளுக்கான உதவித்தொகை, இந்திராகாந்தி தேசிய விதவை உதவித்தொகை ஆகிய பல கோரிக்கைகள் அடங்கிய 340 மனுக்கள் வரப்பெற்றன. அவை அனைத்தையும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பரிந்துரைத்து மேல் நடவடிக்கை எடுக்க சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு மனுக்களை வழங்கினார்.

மேலும், 2019 ஆம் ஆண்டு கொடி நாள் நிதி வசூலாக திருப்போரூர் வட்டாட்சியர் அவர்கள் ரூ.3.78 இலட்சம், திருப்பெரும்புதூர் மாவட்ட கல்வி அலுவலர் அவர்கள் ரூ.2 இலட்சம், காஞ்சிபுரம் வட்டாட்சியர் அவர்கள் ரூ.1.55 இலட்சம், திருக்கழுக்குன்றம் வட்டாட்சியர் அவர்கள் ரூ.1.01 இலட்சம், செங்கல்பட்டு நகராட்சி ஆணையாளர் அவர்கள் அவர்கள் ரூ.1.14 இலட்சம், மதுராந்தகம் வட்டாட்சியர் அவர்கள் ரூ.1 இலட்சம், உதவி ஆணையர் (கலால்) அவர்கள் ரூ.1 இலட்சம், ஆக மொத்தமாக ரூ.11 இலட்சத்து 48 ஆயிரத்திற்கான காசோலைகளை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.பா.பொன்னையா, இ.ஆ.ப., அவர்களிடம் வழங்கினார்.

மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து தென்மேற்கு பருவமழை 2019 மற்றும் வடகிழக்கு பருவமழையினால் இடிமின்னல் தாங்கி இறந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ.4 இலட்சம் வீதம் 6 குடும்பங்களுக்கு ரூ.24 இலட்சத்திற்கான நிவாரண உதவித்தொகையும், முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிருந்து சுவர் இடிந்து விழுத்து உயிரிந்த நபரின் குடும்பத்திற்கு ரூ.1 இலட்சத்திற்கான நிதியுதவியும், மின்சாரம் தாக்கி இறந்தவிர் குடும்பத்திற்கு ரூ.3 இலட்சத்திற்கான நிதியுதவியும் வருவாய்த் துறையின் சார்பில் 8 நபர்களுக்கு முதியோர் உதவித்தொகை பெறுவதற்கான ஆணைகளையும், ஒரு மாற்றுத்திறனாளிக்கு மாற்றுத்திறனாளி உதவிக்தொகை பெறுவதற்கான ஆணையினையும், 2 பயனாளிகளுக்கு விதவை உதவித் தொகை பெறுவதற்கான ஆணையினையும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வழங்கினார். மாற்றுத்திறனாளி நலத்துறையின் சார்பில் கண் பார்வையற்ற திரு.தேவதாஸ் என்பவருக்கு ரூ.5500/- மதிப்பீட்டில் நவீன மடக்கு ஊன்றுகோலை வழங்கினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.என்.சுந்தரமூர்த்தி, தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) திருமதி.மாலதி, உதவி ஆணையர் (கலால்) திருமதி.ஜுவா, மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் திருமதி.எல்.தனலட்சுமி, மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திரு.சுப்பிரமணியன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.எம்.நாராயணன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (கணக்கு) திரு.என்.சீனிவாசன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) திரு.அ.அமீத்துல்லா மற்றும் அரசுத் துறை அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், காஞ்சிபுரம்.**